www.Padasalai.Net www.Trbtnpsc.Com

**11 - ஆம் வகுப்பு** **அரையாண்டுத் தேர்வு - 2023 - 2024**

Time : 1.30 Hrs **வரலாறு** மதிப்பெண்கள் : 100

1. வரலாற்றின் பழமையான காலம்..............................ஆகும்.
(அ) பழங்கற்காலம் (ஆ)புதிய கற்காலம் (இ) செம்புக்காலம் (ஈ) இரும்புக்காலம்
2. பழங்கற்காலக் கருவிகள் முதன்முதலில் ..........இல் அடையாளம் காணப்பட்டன.
(அ) 1860 (ஆ) 1863 (இ) 1873 (ஈ) 1883
3. மெஹர்கார்............பண்பாட்டுடன் தொடர்புடையது.
(அ) பழைய கற்காலப் (ஆ) புதிய கற்காலப் (இ) இடை கற்காலப் (ஈ) செம்புக் காலப்
4. ........ கல்வெட்டுக் குறிப்புகள் மெசபடோமியாவுக்கும் ஹரப்பாவுக்கும் இடையேயான வணிகத் தொடர்புகளைக் குறிப்பிடுகின்றன
(அ) க்யூனிபார்ம் (ஆ) ஹைரோக்ளைபிக்ஸ் (இ) தேவநாகரி (ஈ) கரோஷ்டி
5. ஹரப்பா மக்களுக்கு முக்கியமான வாழ்வாதார வழிமுறையாக..........இருந்தது.
(அ) வேளாண்மை (ஆ) மட்பாண்டம் செய்தல் (இ) கைவினைத்தொழில்கள் (ஈ) மீன்பிடித்தல்
6. மேல் கங்கைச் சமவெளிப் பகுதி எவ்வாறு அழைக்கப்படுகிறது?
(அ) குரு-பாஞ்சாலம் (ஆ) கங்கைச்சமவெளி (இ) சிந்துவெளி (ஈ) விதேகா
7. ஆதிச்சநல்லூர் ................. மாவட்டத்தில் அமைந்துள்ளது.
(அ) கோயம்புத்தூர் (ஆ) திருநெல்வேலி (இ) தூத்துக்குடி (ஈ) வேலூர்
8. கீழ்காணும் இணைகளை கவனிக்கவும்.
(அ) சேனானி - படைத்தளபதி
(ஆ) கிராமணி - கிராமத்தலைவர்
(இ) பாலி - தன்னார்வத்தால் கொடுக்கப்பட்டது.
(ஈ) புரோகிதர் - ஆளுநர்
மேற்கண்டவற்றில் எந்த இணை தவறானது?
(அ) (i) (ஆ) (ii) (இ) (iii) (ஈ) (iv)
9. புத்தர் தனது முதல் போதனையை..........இல் நிகழ்த்தினார்.
(அ) சாஞ்சி (ஆ) வாரணாசி (இ) சாரநாத் (ஈ) லும்பினி
10. அஜாத சத்ருவுக்கும் புத்தருக்குமிடையேயான சந்திப்பைக் குறிப்பிடும் பௌத்த நூல்........ஆகும்.
(அ) சீவகசிந்தாமணி (ஆ) அச்சரங்கசூத்திரம் (இ) கல்பசூத்திரம் (ஈ) சமனபல சுத்தா
11. பகவதிசூத்திரம் ஒரு................நூலாகும்.
(அ) பௌத்தம் (ஆ) சமணம் (இ) ஆசீவகம் (ஈ) வேதம்
12. வட இந்தியாவில் 16 மகாஜனபதங்களில் வலிமை படைத்ததாக வளர்ந்த அரசு........ஆகும்.
(அ) கோசலம் (ஆ) அவந்தி (இ) மகதம் (ஈ) குரு
13. அசோகரது தூண்களில் உள்ள பிராமி எழுத்துகளுக்கு பொருள் கண்டுபிடித்தவர்.................
(அ) தாமஸ் சாண்டர்ஸ் (ஆ) ஜேம்ஸ் பிரின்செப் (இ) சர்ஜான் மார்ஷல் (ஈ) வில்லியம் ஜோன்ஸ்
14. ..............என்ற விசாகதத்தரின் நாடகம் சந்திரகுப்தர் பற்றியும், அவர் மகதப் பேரரசின் அரியணை ஏறியது பற்றியும் கூறுகிறது.
(அ) முத்திராராட்சசம் (ஆ) ராஜதரங்கிணி (இ) அர்த்தசாஸ்திரம் (ஈ) இண்டிகா
15. மெகஸ்தனிஸ் எழுதிய ................... சந்திரகுப்தரின் அரசவையையும், அவரது நிர்வாகத்தையும் விவரிக்கிறது.
(அ) இண்டிகா (ஆ) முத்திராராட்சசம் (இ) அஷ்டத்யாயி (ஈ) அர்த்தசாஸ்திரம்
16. ...................... நல்ல நிர்வாகம் பற்றிய வழிகாட்டும் நூலாகும்.
(அ) அர்த்த சாஸ்திரம் (ஆ) இண்டிகா (இ) ராஜதரங்கிணி (ஈ) முத்திராராட்சசம்
17. கீழ்க்கண்டவற்றில் எந்த இணை தவறானது,
(i) தலையாலங்கானம் - (1) நெடுஞ்செழியன்
(ii) பட்டினப்பாலை - (2) உருத்திரங்கண்ணனார்
(iii) கஜபாகு - (3) இலங்கை
(iv) திருவஞ்சிக்களம் - (4) சோழர்
(அ) (i) (ஆ) (ii) (இ) (iii) (ஈ) (iv)
18. அலெக்சாண்டரின் திறன்மிக்க தளபதிகளுள் ஒருவர்.......................
(அ) செலியுகஸ் நிகேடர் (ஆ) அன்டிகோனஸ் (இ) அண்டியோகஸ் (ஈ) டெமெட்ரியஸ்
19. செலியுகஸ் நிகேடரால் தலைநகரம் பாடலிபுத்திரத்துக்கு............ தூதராக மெகஸ்தனிஸ் அனுப்பப்பட்டார்.
(அ) ரோமானிய (ஆ) கிரேக்க (இ) சீன (ஈ) பிரிட்டிஷ்
20. இந்தோ-கிரேக்கக் கலை மற்றும் சிற்பப் பாணி................. என்று குறிப்பிடப்பட்டது.
(அ) மதுரா கலை (ஆ) காந்தாரக்கலை (இ) பாக் கலை (ஈ) பாலா கலை
21. கீழ்க்கண்டவற்றில் பொருத்தமற்றது எது?
(அ) புத்தசரிதம் - அஸ்வகோஷர்
(ஆ) எரித்ரியக் கடலின் பெரிப்ளஸ் - மெகஸ்தனிஸ்
(இ) அர்த்த சாஸ்திரம் - கௌடில்யர்
(ஈ) காமசூத்திரம் - வாத்சாயனர்
(அ) (i) (ஆ) (ii) (இ) (iii) (ஈ) (iv)
22. ......................பகுதியில் ரோமானிய நாணயங்கள் அகழ்ந்தெடுக்கப்பட்டன.
(அ) அரிக்கமேடு (ஆ) ஆதிச்சநல்லூர் (இ) புகார் (ஈ) பல்லாவரம்
23. பொருத்துக.

| எழுதியவர் | | இலக்கியப்படைப்பு | | |
|---|---|---|---|---|
| (i) தன்வந்திரி | - | (1) சூரிய சித்தாந்தா | (அ) | 4, 3, 1, 2 |
| (ii) வராஹமிகிரா | - | (2) அமரகோஷா | (ஆ) | 4, 1, 2, 3 |
| (iii) ஆர்யபட்டர் | - | (3) பிருஹத் சம்ஹிதா | (இ) | 4, 2, 1, 3 |
| (iv) அமரசிம்மா | - | (4) ஆயுர்வேதா | (ஈ) | 4, 3, 2, 1 |

24. ....................................க்குக் கவிராஜா என்ற பட்டம் அளிக்கப்பட்டது.
(அ) முதலாம் சந்திரகுப்தர் (ஆ) சமுத்திரகுப்தர் (இ) இரண்டாம் சந்திரகுப்தர் (ஈ) ஸ்ரீகுப்தர்
25. ............என்ற சீனப் பயணி பொ.ஆ.ஐந்தாம் நூற்றாண்டின் இந்திய சமூகத்தைக் குறித்து விரிவாக எழுதியுள்ளார்.



CamScanner
Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

(அ) இட்சிங் (ஆ) யுவான்-சுவாங் (இ) பாஹியான் (ஈ) வாங்-யுவான்-சீ

26.கீழ்க்கண்டவற்றில் எது குப்தர் காலத்துக் குடைவரைக் குகைக் கோவில் இல்லை?
(அ) உதயகிரி குகை (ஒடிசா) (ஆ) அஜந்தா - எல்லோரா குகை (மகாராஷ்டிரா)
(இ) எலிபண்டா குகை (மகாராஷ்டிரா) (ஈ) பாக் (மத்தியப்பிரதேசம்)
(அ) (i) (ஆ) (ii) (இ) (iii) (ஈ) (iv)

27.தர்க்கம் குறித்த முதல் முழுமையான பௌத்த நூலை எழுதியவர்
(அ) திக்நாகர் (ஆ) வசுபந்து (இ) சந்திரகாமியா (ஈ) வராகமிகிரர்

28.பிரபாகர வர்த்தனர் தனது மகள் ராஜ்யஸ்ரீயை.........என்பவருக்குத் திருமணம் செய்து கொடுத்தார்.
(அ) கிரகவர்மன் (ஆ) தேவகுப்தர் (இ) சசாங்கன் (ஈ) புஷ்யபுத்திரர்

29................. என்பவர் அயலுறவு மற்றும் போர்கள் தொடர்பான அமைச்சர் ஆவார்
(அ) குந்தலா (ஆ) பானு (இ) அவந்தி (ஈ) சர்வாகதா

30.கீழ்க்கண்டவற்றுள் ஹர்ஷரால் எழுதப்பட்ட நூல் எது?
(அ) ஹர்ஷசரிதம் (ஆ) பிரியதர்சிகா (இ) அர்த்த சாஸ்திரம் (ஈ) விக்ரம ஊர்வசியம்

31.கீழ்க்கண்டவற்றுள் தவறானது எது?
(அ) தர்மபாலர் சோமபுரியில் பெரியதொரு பௌத்த விகாரையைக் கட்டினார்.
(ஆ) இராமபாலர் இராமசரிதத்தை எழுதினார்.
(இ) மகிபாலர் கீதங்கள் வங்காளத்தின் கிராமப்பகுதிகளில் இப்போதும் பாடப்படுகின்றன.
(ஈ) கௌடபாடர் ஆகம சாத்திரத்தை இயற்றினார்.

32.கீழ்க்கண்டவற்றில் எது சரியாக இணைக்கப்படவில்லை?
(அ) மூன்றாம் கோவிந்தன் - வாதாபி
(ஆ) ரவிகீர்த்தி - இரண்டாம் புலிகேசி
(இ) விஷயம் - ராஷ்ட்டிரகூடர்
(ஈ) நம்மாழ்வார் - குருகூர்

33.காம்போஜம் என்பது நவீன.....................
(அ) அஸ்ஸாம் (ஆ) சுமத்ரா (இ) ஆனம் (ஈ) கம்போடியா

34..............சமணர்களால் நிறுவப்பட்ட ஒரு சமய மையம்
(அ) சரவணபெலகொலா (ஆ) மதுரை (இ) காஞ்சி (ஈ) கழுகுமலை

35.அயல்நாட்டு வணிகர்கள்.....................என்று அறியப்பட்டனர்.
(அ) பட்டணசாமி (ஆ) நானாதேசி (இ) விதேசி (ஈ) தேசி

36.8-ஆம் நூற்றாண்டில் அரபியர் படையெடுப்பின்போது சிந்து அரசர்.............ஆவார்.
(அ)ஹஜ்ஜஜ் (ஆ) முகமது-பின்-காஸிம் (இ) ஜெய சிம்ஹா (ஈ) தாகிர்

37.உலகப் புகழ்பெற்ற கஜுராஹோ கோயிலைக் கட்டியவர்கள்....................
(அ) ராஷ்டிரகூடர் (ஆ) டோமர் (இ) சண்டேளர் (ஈ) பரமர்

38.மம்லுக் என்ற பெயர் ஒரு..................க்கான அரபுத் தகுதிச் சுட்டாகும்.
(அ) அடிமை (ஆ) அரசர் (இ) இராணி (ஈ) படைவீரர்

39.இபின் பதூதா ஒரு.............. நாட்டுப்பயணி
(அ) மொரக்கோ (ஆ) பெர்சியா (இ) துருக்கி (ஈ) சீனா

40.அரசப் பதவியை விடுத்து தில்லியிலிருந்து விலகி முப்பதாண்டுகள் அமைதியில் வாழ்ந்த ஒரே சுல்தான்
(அ) முபாரக்ஷா (ஆ) ஆலம் ஷா (இ) கிசர் கான் (ஈ) துக்ரில் கான்

41......................... கடல்வழிப் படையெடுப்புகள் ஸ்ரீவிஜயா அரசு வரை விரிவடைந்திருந்தன.
(அ) மூன்றாம் குலோத்துங்கன் (ஆ) முதலாம் இராஜேந்திரன் (இ) முதலாம் இராஜராஜன் (ஈ) பராந்தகன்

42.................. ஒரு கலத்துக்குச் சமம் ஆகும்.
(அ) 28 கி.கி. (ஆ) 27 கி.கி. (இ) 32 கி.கி. (ஈ) 72 கி.கி.

43.கெடா............இல் உள்ளது.
(அ) மலேசியா (ஆ) சிங்கப்பூர் (இ) தாய்லாந்து (ஈ) கம்போடியா

44................. பாண்டியர்களின் முதல் தலைநகரமாகும்.
(அ) மதுரை (ஆ) காயல்பட்டினம் (இ) கொற்கை (ஈ) புகார்

45.பொ.ஆ.800 ஐச் சேர்ந்த மானூர் கல்வெட்டு............ நிர்வாகம் குறித்த செய்திகளைத் தருகின்றது.
(அ) மத்திய அரசு (ஆ) கிராமம் (இ) படை (ஈ) மாகாணம்

46.கீழ்க்கண்டவற்றை காலவரிசைப்படுத்துக.
(அ) சங்கம வம்சம், ஆரவீடு வம்சம், சாளுவவம்சம், துளுவ வம்சம்
(ஆ) சங்கம வம்சம், சாளுவ வம்சம், துளுவ வம்சம், ஆரவீடு வம்சம்
(இ) சாளுவ வம்சம், சங்கம வம்சம், துளுவ வம்சம், ஆரவீடு வம்சம்
(ஈ) சங்கம வம்சம், துளுவ வம்சம், சாளுவ வம்சம், ஆரவீடு வம்சம்

47.விஜயநகர அரசின் அரச முத்திரை...............
(அ) பன்றி (ஆ) புலி (இ) மீன் (ஈ) வில்

48.கிருஷ்ணதேவராயர் தன் வெற்றிகளின் நினைவாக வெற்றித் தூணை எழுப்பிய இடம்...............
(அ) பெல்காம் (ஆ) கட்டாக் (இ) சிம்மாச்சலம் (ஈ) இராஜமகேந்திரவரம்

49.ஷா நாமாவை எழுதியவர்............
(அ) பிர்தௌசி (ஆ) இபின்பதூதா (இ) நிக்கோலோ டி கோன்டி (ஈ) டோமிங்கோ பயஸ்

50.பொருத்துக.
i. அப்துர் ரசாக் - (1) ரஷ்யா
ii. நிகிடின் - (2) சாளுவநாயக்கர்
iii. டோமிங்கோ பயஸ் மற்றும் நூனிஸ் - (3) பாரசீகம்
iv. செல்லப்பா - (4) போர்த்துகல்
(அ) 1, 2, 3, 4 (ஆ) 4, 3, 2, 1 (இ) 2, 1, 4, 3 (ஈ) 3, 1, 4, 2

51.கூன் பாண்டியன் என்று அழைக்கப்பட்டவர்.....................
(அ) முதலாம் மகேந்திரவர்மன் (ஆ) மாறவர்மன் அரிகேசரி (இ) நரசிம்மவர்மன் (ஈ) சுந்தரபாண்டியன்

52.பக்கீர் எனக் குறிப்பிடப்படுபவர்.............
(அ) இஸ்லாமிய ஞானி (ஆ) பௌத்தத் துறவி (இ) இந்துத் துறவி (ஈ) சீக்கிய குரு

53.அக்பரின் அரசவையில் ஆக்ராவின் பார்வைத் திறனற்ற பாடகர் என்று அறியப்பட்டவர் ..................
(அ) சூர்தாஸ் (ஆ) துக்காராம் (இ) இராமானந்தர் (ஈ) மீராபாய்



CamScanner
Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

54. பொருத்துக.
(i) கபீர் - (1) சாகித்திய லஹரி
(ii) சூர்தாஸ் - (2) ஷேக் நாதி
(iii) சூபியிஸம் - (3) சம்பந்தர்
(iv) கூன் பாண்டியன் - (4) நெசவாளர்
(அ) 2, 3, 4, 1 (ஆ) 4, 3, 2, 1 (இ) 2, 4, 3, 1 (ஈ) 3, 4, 2, 1

55. 1526 ஆம் ஆண்டு நடைபெற்ற முதலாம் பானிப்பட் போரில் பாபர்..............யை திறம்பட பயன்படுத்தியதின் மூலம் வெற்றி பெற்றார்.
(அ) காலாட்படை (ஆ) குதிரைப்படை (இ) பீரங்கிப்படை (ஈ) யானைப்படை

56. அக்பரது நிதி நிர்வாகம்.............. நிர்வாக முறையைப் பின்பற்றி அமைக்கப்பட்டது.
(அ) பாபர் (ஆ) ஹுமாயூன் (இ) ஷெர்ஷா (ஈ) இப்ராஹிம் லோடி

57. .............................. தனது ஆட்சியின்போது ஜிஸியா வரியை மீண்டும் விதித்தார்.
(அ) அக்பர் (ஆ) ஜஹாங்கீர் (இ) ஷாஜகான் (ஈ) ஔரங்கசீப்

58. கப்பலின் ஓட்டகம் என சொல்லப்படும் தொழில்நுட்பத்தை உலகத்திலேயே கண்டறிந்த முதல் அரசர்.......... ஆவார்.
(அ) அக்பர் (ஆ) ஷாஜஹான் (இ) ஷெர்ஷா (ஈ) பாபர்

59. ...................... சேர்ந்த தான்சேனை அக்பர் ஆதரித்தார்.
(அ) ஆக்ராவை (ஆ) குவாலியரை (இ) டில்லியை (ஈ) மதுராவை

60. மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழை இயற்றியவர்.
(அ) தாயுமானவர் (ஆ) குமரகுருபரர் (இ) இராமலிங்க அடிகள் (ஈ) சிவப்பிரகாசர்

61. கீழ்க்கண்டவற்றுள் எது தவறாகப் பொருத்தப்பட்டுள்ளது.
(அ) பாஸ்கராச்சாரியா - நீதிநெறி விளக்கம்
(ஆ) ஆமுக்தமால்யதா - கிருஷ்ண தேவராயர்
(இ) ஜகன்னாத பண்டிதர் - ரசகங்காதரா
(ஈ) அல்லசானிபெத்தண்ணா - மனுசரித்திரா

62. பொருத்துக.
(i) அடல் பாசல் - (1) ஔரங்கசீப்
(ii) ஜும்மா மசூதி - (2) அக்பர்
(iii) பாதுஷாஹி மசூதி - (3) ஷெர்ஷா
(iv) புராண கிலா - (4) ஷாஜகான்
(அ) 2, 4, 1, 3 (ஆ) 3, 2, 1, 4 (இ) 3, 1, 4, 2 (ஈ) 1, 3, 2, 4

63. வலிமைமிக்க கொரில்லாப் போர் முறையைப் பின்பற்றியோர்
(அ) மராத்தியர் (ஆ) முகலாயர் (இ) ஆங்கிலேயர் (ஈ) நாயக்கர்

64. புரந்தர் உடன்படிக்கை, சிவாஜிக்கும்..................க்கும் இடையே கையெழுத்தானது.
(அ) அஃப்சல்கான் (ஆ) செயிஷ்டகான் (இ) ஜெய்சிங் (ஈ) ஔரங்கசீப்

65. சிவாஜியின் ஆலோசனை சபை ............... என்று அழைக்கப்பட்டது.
(அ) அஷ்டபிரதானம் (ஆ) அஷ்டதிக்கஜங்கள் (இ) நவரத்தினங்கள் (ஈ) பஞ்சபாண்டவர்கள்

66. ................ கோகினூர் வைரத்தை எடுத்துச் சென்றார்.
(அ) அஹமது ஷா அப்தலி (ஆ) நாதிர் ஷா (இ) ஷுஜா-உத்-தௌலா (ஈ) நஜீப்-உத்-தௌலா

67. மனிதர்களுக்காகவும் மற்றும் விலங்குகளுக்காகவும் மூலிகை மருந்துகளைத் தயாரிக்க.......இரண்டாம் சரபோஜியால் நிறுவப்பட்டது.
(அ) சரஸ்வதி மஹால் (ஆ) முக்தாம்பாள் சத்திரம் (இ) நவவித்யா (ஈ) தன்வந்திரி மஹால்

68. கீழ்க்கண்டவற்றில் சரியான விடையைத் தேர்ந்தெடு.
கூற்று: மூன்றாம் பானிப்பட் போர் ஆங்கிலேயரின் அதிகார எழுச்சிக்கு வழிவகுத்தது.
காரணம்: இத்தோல்வி மராத்தியருக்கும் முகலாயருக்கும் ஒரு பெரிய அதிர்ச்சியைக் கொடுத்தது.
(அ) கூற்று சரி : காரணம் கூற்றின் சரியான விளக்கம் ஆகும்.
(ஆ) கூற்று சரி : காரணம் தவறு.
(இ) கூற்று மற்றும் காரணம் தவறானவை
(ஈ) கூற்று சரி. காரணம் கூற்றின் சரியான விளக்கம் அல்ல.

69. கீழ்க்கண்டவற்றுள் எது சரியாக பொருத்தப்படவில்லை.
(அ) சிவாஜி - மலை எலி
(ஆ) முதலாம் பாஜிராவ் - உதகிர் போர்
(இ) தைமூர் ஷா - லாகூரின் வைஸ்ராய்
(ஈ) தேசிங்கு - செஞ்சி

70. பொருத்துக.
(i) அமத்யா - (1) அரசரின் நடவடிக்கைகள் பற்றிய ஆவணங்கள்
(ii) சுமந்த் - (2) பொது ஒழுக்க நடைமுறைகள்
(iii) பண்டிட் ராவ் - (3) போர் மற்றும் அமைதி
(iv) வாக்கிய நாவிஸ் - (4) அரசின் அனைத்து பொது கணக்குகள்
(அ) 4, 1, 2, 3 (ஆ) 1, 2, 4, 3 (இ) 4, 3, 2, 1 (ஈ) 1, 4, 2, 3

71. இந்தியாவில் போர்த்துகீசியரின் அரசியல் தலைமையிடம்..............ஆகும்.
(அ) கோவா (ஆ) டையூ (இ) டாமன் (ஈ) சூரத்

72. மேற்கு ஆசியாவிற்கும் ஐரோப்பாவிற்கும் நுழைவாயிலாக இருந்த துறைமுகம்...........ஆகும்.
(அ) டையூ (ஆ) கல்கத்தா (இ) பம்பாய் (ஈ) சூரத்

73. ஆங்கிலேயர் 1639ஆம் ஆண்டு உள்ளூர் ஆட்சியாளரிடமிருந்து பெற்ற நிலத்தில்.......கோட்டையைக் கட்டினர்.
(அ) புனித ஜார்ஜ் கோட்டை (ஆ) வில்லியம் கோட்டை (இ) வேலூர் கோட்டை (ஈ) கோல்கொண்டா கோட்டை

74. நீலநீர்க் கொள்கையுடன் தொடர்புடையவர்......................
(அ) பிரான்சிஸ்கோ-டி-அல்மெய்டா (ஆ) அல்போன்சோ-டி-அல்புகர்க்
(இ) நீனோ-டா-குன்கா (ஈ) ஆன்டோனியோ-டி-நாரான்கா

75. ராபர்ட் கிளைவ்........... இல் வெற்றிபெற்று வங்காளத்தில் ஆங்கிலேயர் ஆட்சியை வலிமை பெறச் செய்தார்.



CamScanner

Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

(அ) கர்நாடகப் போர்கள் (ஆ) ஏழாண்டுப் போர் (இ) பக்சார் போர் (ஈ) பிளாசிப் போர்.
76.வந்தவாசிப் போர்.................... க்கிடையே நடைபெற்றது.
(அ)அயர்கூட் மற்றும் லாலி (ஆ) ராபர்ட் கிளைவ் மற்றும் லாலி (இ) அயர்கூட் மற்றும் புஸ்ஸி (ஈ)ராபர்ட் கிளைவ் மற்றும் புஸ்ஸி
77.கீழ்க்கண்டவற்றுள் எது தவறாக பொருத்தப்பட்டுள்ளது.
(அ) தரங்கம்பாடி - டேனியர்
(ஆ) சர் தாமஸ் ரோ - பிரெஞ்சுக்காரர்
(இ) அன்வாருதீன் - ஆற்காடு நவாப்
(ஈ) அல்புகர்க் - போர்த்துக்கீசியர்
78.பொருத்துக.
(i) சாமுத்ரி (சாமரின்) - (1) அச்சுப்பதிப்பு
(ii) ஹென்ரிக்ஸ் - (2) ஹைதராபாத் நிஜாம்
(iii) முசாபர் ஜங் - (3) சந்தா சாகிப்
(iv) ஆற்காட்டு நவாப் - (4) கள்ளிக்கோட்டை அரசர்
(அ) 4, 1, 2, 3 (ஆ) 4, 3, 2, 1 (இ) 3, 2, 1, 4 (ஈ) 2, 1, 4, 3
79.........................வங்காளத்தில் இரட்டை ஆட்சியை அறிமுகப்படுத்தினார்.
(அ) வாரன் ஹேஸ்டிங்ஸ் (ஆ) டியூப்ளே (இ) காரன் வாலிஸ் (ஈ) ராபர்ட் கிளைவ்
80.இரயத்துவாரி முறையை அறிமுகப்படுத்தியவர்.............
(அ) காரன்வாலிஸ் (ஆ) தாமஸ் மன்றோ (இ) ராபர்ட் கிளைவ் (ஈ) வாரன் ஹேஸ்டிங்ஸ்
81.வாரிசு உரிமை இழப்புக் கொள்கையின்படி ஆங்கிலேய அரசுடன் இணைக்கப்பட்ட முதல் மாகாணம்
(அ) நாக்பூர் (ஆ) அவத் (இ) ஜான்சி (ஈ) சதாரா
82............... இந்தியாவில் ஆங்கில மொழியை அலுவல் மொழியாகவும், பயிற்று மொழியாகவும் அறிமுகப்படுத்தினார்.
(அ) காரன்வாலிஸ் (ஆ) வில்லியம் பெண்டிங் (இ) தாமஸ் மெக்காலே (ஈ) தாமஸ் மன்றோ
83.சென்னைப் பல்கலைக்கழகம் நிறுவப்பட்ட ஆண்டு......................
(அ) 1837 (ஆ) 1861 (இ) 1844 (ஈ) 1857
84....................... என்பவரின் முயற்சியால் இந்தியாவில் சதி எனும் உடன்கட்டை ஏறும் முறை ஒழிக்கப்பட்டது.
(அ) வாரன் ஹேஸ்டிங்ஸ் (ஆ) வில்லியம் ஜோன்ஸ் (இ) ராஜாராம்மோகன்ராய் (ஈ) தயானந்த சரஸ்வதி
85.கீழ்க்கண்டவற்றுள் எது தவறாக பொருத்தப்பட்டுள்ளது?
(அ) கங்காதர ராவ் - ஜான்சி
(ஆ) ரகுஜி போன்ஸ்லே - நாக்பூர்
(இ) ஷாஜி - சதாரா
(ஈ) சிந்தியா - கோலாப்பூர்
86.பொருத்துக.
(i) ஆர்தர் காட்டன் - (1) சமஸ்கிருத கல்லூரி
(ii) வில்லியம் ஸ்லீமேன் - (2) கொள்ளிடம்
(iii) வில்லியம் பெண்டிங் - (3) தக்கர்களை அடக்குதல்
(iv) காரன்வாலிஸ் - (4) சதி ஒழிப்புச்சட்டம்
(அ) 4, 1, 2, 3 (ஆ) 2, 3, 4, 1 (இ) 3, 2, 1, 4 (ஈ) 2, 1, 4, 3
87.உடையார் அரசர்களுக்கு எதிராக மராத்தியர்களை வெற்றிகரமான கையாண்ட பின்.........உண்மையான அரசர் ஆனார்.
(அ) ஹைதர் அலி (ஆ) நஞ்சராஜா (இ) நாகம நாயக்கர் (ஈ) திப்புசுல்தான்
88.திப்பு சுல்தான் .............. பகுதியைக் கைப்பற்றியதால் மூன்றாம் மைசூர் போர் தொடங்கியது.
(அ) கள்ளிக்கோட்டை (ஆ) குடகு (இ) கொடுங்களூர் (ஈ) திண்டுக்கல்
89.வேலு நாச்சியார்...........அரசருடைய மகள்
(அ) சிவகங்கை (ஆ) புதுக்கோட்டை (இ) இராமநாதபுரம் (ஈ) பழவநத்தம்
90.வீரபாண்டிய கட்டபொம்மன் தொடர்பான பிரச்சனைகளை தவறாகக் கையாண்டதால் பணிநீக்கம் செய்யப்பட்ட ஆங்கிலேய ஆட்சியர்................ ஆவார்.
(அ)W.C.ஜாக்சன் (ஆ) A. பானர்மேன் (இ) S.R.லூஷிங்டன் (ஈ) P.A. ஆக்னியூ
91.வேலூர் புரட்சிக்கு உடனடிக் காரணமாக அமைந்த நிகழ்வு.................ஆகும்.
(அ) என்.பீல்டு ரக துப்பாக்கித் தோட்டாக்கள் (ஆ) நவீன சீருடை மாற்றம்
(இ) புதிய தலைப்பாகை (ஈ) கொழுப்பு தடவப்பட்ட தோட்டாக்கள்
92.1857 ஆம் ஆண்டு புரட்சியின்போது இந்தியாவின் கவர்னர்-ஜெனரலாக இருந்தவர்............. ஆவார்
(அ)டல்ஹௌசி (ஆ) கானிங் (இ)மின்டோ (ஈ) ஜேம்ஸ் அன்ட்ரியூ ராம்சே
93.1857 ஆம் ஆண்டு புரட்சியின்போது நானா சாகிப்பின் படைகளைத் தோற்கடித்தவர் ............
(அ) ஹென்றி லாரன்ஸ் (ஆ) மேஜர் ஜெனரல் ஹேவ்லாக் (இ) சர் ஹியூக் வீலர் (ஈ) ஜெனரல் நீல்
94.பொருத்துக.
(i) ஜில்லெஸ்பி - (1) ஸ்ரீரங்கப்பட்டணம் (அ) 1, 2, 3, 4
(ii) மஞ்சி - (2) பாரக்பூர் (ஆ) 3, 4, 1, 2
(iii) ஜாக்கோபியன் கழகம் - (3) வேலூர் கலகம் (இ) 3, 2, 1, 4
(iv) மங்கள் பாண்டே - (4) சந்தால்கள் (ஈ) 2, 3, 4, 1
95.இந்தியாவில் சீர்திருத்தங்கள் பற்றிய பல கருத்துக்கள் தோன்றிய முதல் மாகாணம் .............ஆகும்.
(அ) பஞ்சாப் (ஆ) வங்காளம் (இ) பம்பாய் (ஈ) சென்னை
96.இந்திய மறுமலர்ச்சியின் தந்தை...............ஆவார்.
(அ) சுவாமி விவேகானந்தர் (ஆ) தயானந்த சரஸ்வதி (இ) இராஜா ராம்மோகன் ராய் (ஈ) ஆத்மராம் பாண்டுரங்
97.தேசிய சமூக மாநாடு.............முயற்சியால் ஒருங்கிணைக்கப்பட்டது.
(அ) M.G. ரானடே (ஆ) தேவேந்திரநாத் தாகூர் (இ) கேசவ சந்திர சென் (ஈ) இராமகிருஷ்ண பரமஹம்சர்
98.ஒரு பைசா தமிழன் என்ற வாரப்பத்திரிகையை நடத்தியவர் ................ஆவார்.
(அ) சுவாமி விவேகானந்தர் (ஆ) தயானந்த சரஸ்வதி (இ) இராமலிங்க அடிகளார் (ஈ) அயோத்திதாச பண்டிதர்
99.தமிழ்நாட்டில் பிரம்ம சமாஜத்தின் ஆதரவாளராகத் திகழ்ந்தவர்..................ஆவார்.
(அ) இராமலிங்க அடிகளார் (ஆ) காசிவிசுவநாத முதலியார் (இ) அயோத்திதாச பண்டிதர் (ஈ) தேவேந்திரநாத் தாகூர்
100.மேற்கத்திய அறிவியலை அறிமுகப்படுத்த சையது அகமதுகான் நிறுவிய அமைப்பு .............ஆகும்.
(அ) சத்ய சோதக் சமாஜம் (ஆ) சிங் சபா இயக்கம் (இ) அறிவியல் கழகம் (ஈ) பிரம்மஞானசபை.



CamScanner
Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com